332

இவை

திருவாரூர் விஜயபுரத்திலிருக்கும்

வெற்றிலை வர்த்தகம்

---

கா. சரீபுசாயபு அவர்களாலும்,

வி. க. ப. மு. இஸ்மாயில் ராவுத்தர்

அவர்களாலும்,

பாடியருளிய

# கீர்த்தனைக் கொத்து.

வி. எஸ். பாப்புதாசர் அவர்களால்

பார்வையிடப்பட்டு

---

திருவாரூர்,

விக்டோரியா அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1919

23 JAN 19..

Q7:417

N19

179074

# சாத்துக்கவி.

இஃது

பட்டுக்கோட்டை மகாவித்துவான்

பு. மு. சி. சிங்கக்குட்டி சீரியரவர்கள்,

இயற்றியது.

---

நாவளரும் விஜயநகர் வாழுநண்பர்
மகிமை சரீப் சாயபுவும் வி. க. ப. மு.
நேவளரு மிஸ்மாயீ லெனும் பேரோனு
நிகழ்த்திய கீர்த்தனைக் கொத்தை நிலத்துமாந்தர்
தூவளரு மமுதென்பர் விண்ணோரியாருந்
துய்க்கு நவநீதமென்பர் துகடீர் கல்விப
பாவளரும் புலவரெலாங் கிதசாரப்
பண்பொலியும் பேழையெனப் பகர்வர் மாதோ.

# நபிநாயகம் அவர்கள் பேரில் பாடியது.

கண்ணி.

(பதம் பல்லவி.)

---

அண்ணலே அபயம் தாரும்
அன்புவைத்திதன் துயர் தீரும்
மண்ணவர் விண்ணவர் போற்றும்
மாசில்லா மணியே வாரும் (அண்ணலே)

2. ஆதியொளியில் பிறந்து
ஆணிமாமுத்தாயிருந்து
ஜோதி யெக்கின் மாமயிலாய்
துலங் கிடும்யா ரசூலே (அண்ணலே)

3. பொல்லானி புலிசென்மீது
போராடுகி றுனிப் போது

சொல் லொண்ணாத் துயரம் தீர
துலக்குவீர் யாரசூலே. (அண்ணலே)

4. மானுக்குப் பிணையாய் நின்றீர்
மங்குல் குடையிடச் சென்றீர்
தீனுக்கொரு தீபமெனச்
சிறந்திடும்யா ரசூலே (அண்ணலே)

5. ஹாசிம் கிளை மாமணியே
அப்துல்லா தவக்கனியே
தாசன் சரீபின் பிணியைத்
தவிர்த்தாளும் யாரசூலே (அண்ணலே)

---

ஆதாரம் வேறில்லை நாதா ஆதி
அகதானவ தூதா—இனி

1. மாதவத்தோர் புகழும் மதினாவில் வாழ்வே
மன்னரப்துல் லாதவ மஹ்மூதெங் கோவே

பாதபங்கயம் தந்தாளுமெம் பூவே
பாக்கியர் முஹம்மதுவே (ஆதாரம்)

2. மாசில்லாதவன் மகிழ் பெருமானே
மதியை இரவில் வரவழைத்த சீமானே
நேசித்தார்க்கு மோச்சமளிக்கும் பூமானே
நித்தம் கண்பாருங் கோனே (ஆதாரம்

3. காதகாதம் கமழ் கஸ்தூரி வாசா
கானின் மானை மீட்டிட கருணைப்பிரகாசா
வேதமோர் நான்கிலும் விளங்கும் சர்வேசா
விகசித உல்லாசா (ஆதாரம்)

ஹாசிம் கிளையில் அவதரித்த மாமணியே
ஆமினம்மாள் ஈன்றெடுத்த மென்கனியே
தாசன் சரீபின் பலவிதப்பிணியைத்
தவிர்த்தாள்வீர் அணியே. (ஆதாரம்)

# பதம்.

1. முடிமன்னர் போற்றும் பெருமானே
முதுமறை யோர்க்கும் தானே—சீமானே
முத்திவழிசேர் நீனே
முஹம்மதெனும் கோனே.

2. அண்டர் துதிக்கும் மகுமூதா
அகதானவனின் தூதா—சம்போக
அம்புய மலர் பாதா
அஹமதென்னும் நீதா (முடி)

3. நானங்கமழும் நடையாளா
நானிலம் புகழும் மாலா—சன்மார்க்கம்
நவின்றிடும் மென்மேலா
நபிகட்கெல்லாம் மூலா (முடி)

மடமங்கை கதிஜாமணாளா
மதினாநகர்க்கனுகூலா—அப்துல்லா

மகவாய் வந்த சீலா
மார்க்கச் செங்கோலா (முடி)

5. தாசன் சரீபை கண்பாரும்
தாஹா நன்னபியே வாரும் என்னுளும்
தாருல் பக்காவில் சேரும்
தமியன் துயர் தீரும் (முடி)

---

## தாகூர் ஆண்டவர்பேரில்ல் கீர்த்தனே.

(அம்மா மதுரை மீனாட்சி என்ற வர்னமெட்டு)

1. சாஹூல் ஹமீதொலியே வாரும்—என்
சஞ்சலங்கள் தீரும் சந்ததம்
சரண மலர் தாரும்
சமைய முகம்பாரும் சமைய முகம்பாரும் [சா-ல்]

2. மன்னர் அரசன் குத்தூசின் பாலா
பாநிலம் புகழும் மேலா—நன் னுகை

மாதவ செங்கோலா
மறையோர்க் கனுகூலா மறையோர்க்கனுகூலா

3. தஞ்சை ராஜன் பிணியைத் தவிர்த்தோரே
தவத்தோர்கள் புகழும் பீரே—என்மீது
தயவு செய்குவீரே
தருணம கமேமரே தருணம கமேமரே.

4. மண்மேல் யானொரு பாவி
மலர்ப்பாதமருள் மேவி மெய்ஞான
மாதவ சஞ்சீவி
மனமகிழக்கூவி மனமகிழக்கூவி [சாஹுல்]

5. அஞ்சுமாறும் மறியேனே உண்மை
அனுதினம் துதித்தேனே சீமானே
அடியன் சரீபைத் தானே [சாஹுல்]
ஆதரிக்கும் கோமானே.

(வேறு பதம்)

கண்பார்த்தெனை யன்பாய்க் காரும் கல்கண்டு மஸ்தானொலியே

அனுபல்லவி.

பண்டாரும் விஜயபுரம் பாங்கிலுரை மதுரப் [லியே
பட்டணமதில் திட்டமாயு மர்மட்டறும் தவமஸ்தானே

உங்கள் துணைகருதி உற்றேனிவ ணிறுதி
உத்தமனருள்பெற்ற ஒலியே நற்றரும் தவமுற்றபுலியே

புதுமை விளக்கும் பீரே புனிதத்தவ முள்ளோரே
புத்தி ரில்லார்க் கித்தரைமீது சித்தங்களிக்க செய்திடுவீரே

மாசில்லா மாமணியே மகிமைச் சிகாமணியே
தாசன் அப்துல்காதர் வாசக்கமுணர்ந்து நேசன் சரீலைஆதரித்
[தருள்வீர்.

---

கடைக்கண்பார்க்க ஒண்ணாதா
கல்கண்டு மஸ்தானொலி நாதா (கடை)

அநுபல்லவி.

இடையூ றகற்று யென்னையாளாய்
இனிய செம்பொன்மலர்ப் பாதா (கடை)

1. மதுரப் பட்டணம் வாழும்
மதிபோல் இலங்குமெந்நாளும்
கதிவேறில்லையென்னையாளும்
கல்கண்டு மஸ்தானொலிநாதா (கடை)

2. மூமீன் குலத்திலுயர்ந் தோரே
முருசிதான யென்பீரே.
காமிலாய் வந்த மகமேரே
கல்கண்டு மஸ்தா னொலிநாதா [கடை]

3. விஜய நன்னகர் வாசன்
வி. எஸ். அப்துல்காதர் சேஷன்
நிசமனத்தோர் புகழ்நேசன்
நின்மலமான சரீப் தாசன்

---

1. காரும் காருண்ய புலியே கற்கண்டுமஸ்தானொலியே
ஆரியர் புகழ்ந்திடும் பாரிலென் கோவே
ஆரணரான யெங்கள் காரணப்பூவே
அற்புத கற்பக விற்பன மஸ்தானொலியே [காரும்

2. சாந்தகுண அலங்காரா சர்வலோகம் புகழும்ஒய்யாரா
வேந்தாகள் பரவிடும் ஏந்தலென்பீரே.
வேண்டினேன் உமதருளாண்டருள் வீரே
விண்ணவர், போற்றிடும் மன்னவர் மஸ்தானொலியே

3. மாயத்துனியாவை நம்பிமதிமோசமானேன நான்
நாயகரான எங்கள் தாயகமணியே [வெம்பி

நாவினில் கவிதமாத்தனை மேவுஞ் செங்கனியே
நம்பினேன் மலர்ப்பதம் அன்புயர் மஸ்தானொலியே (காரு)

4. பாதபங்கயம் தாரும்படி மீதிலென் துயர் தீரும்
மாதவரான எங்கள் வேதியர் கோனே
மாசில்லா மணியே னம்தேசிகர் தானே
மாகூஷிமை தங்கிடும் காகூஷிதந்தருள் புரிவீர் [காரும்]

5. தேசம் புகழ்ந்திடும் வாசன் திருவிஜய நகரினுல்
தாசன் இவ்வமாயிலே நேசம் வைத்தாளும் [வாசன்
தானைதந்தாளும் இதுவேவனை மென்மேலும்
சந்ததம் வந்தருள் சுந்திரமஸ்தானொலியே [காரும்]

---

சதுர்வேதம் புகழ்கொண்ட நாதா—ஜீவ்
சாவதயாபர ? தாதா.

## அனுபல்லவி

கதிகாட்டி கரைசேர்க்கும் கோவே
கவிமாவமுதூட்டிய பூவே
மதிஞுநகர் வாழ்மகமுதா (ஜீவ)

பொய்யான வாழ்விதை நம்பி
புவிமீதினில் நொந்தனன் வெம்பி
துய்தானவன் புகழும் வேதா (ஜீவ)

பொல்லாத வஞ்சகன்யானே
பொய் பேசிடும் நெஞ்சமுள்ளோனே
என் வல்வினை தீர்த்தருள் நாதா [ஜீவ]
வாரணம் புவிசர்வமும்மாலே
வருத்தே னென்றுனிறை மென்மேலே
ஞானவாரிதியில் சென்ற அதீதா [ஜீவ]

அஞ்செழுத் தானந்த தீபா
அகிலம் புகழும் மயில்ரூபா
மஞ்சகுடையிடும் நீதா [ஜீவ]

மன்னாப்னல்லாவின் திருப்பாலா
மடமங்கை கதிஜா மணாளா
விண்ணவர் பரவும் விநோதா [ஜீவ]

இருலோகத்திற்கும் யெஜமானே
இஸ்மாயிலை யாளும் சீமானே
நறும் வாசம் கமழ்ந்திடும் பாதா [ஜீவ]

